[1970 மார்ச் 13

மதுரையிலுள்ள பார்வையற்றோர் புனர் வாழ்வு நிலையம்

*352 வினா—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையிலுள்ள பார்வையற்றோர் புனர்வாழ்வு நிலையம் எந்த வெளி நாட்டு உதவியுடன் நடத்தப்படுகிறது?

(இ) எந்த அடிப்படையில் பார்வையற்றோர் அங்கு சேர்க்கப் படுகின்றனர்?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) மதுரை குருடர்களுக்கு மறு வாழ்வளிக்கும் நிலையம், அமெரிக்க அரசு சமூக மறு வாழ்வளிப்புப் பணித்துறையின் (சுகாதாரம், கல்வி, தொழில் துறை நல, மறு வாழ்வளிப்பு நிர்வாகம்) உதவியுடன் செயல்பட்டு வருகிறது.

(இ) 18 வயதுக்கு மேற்பட்ட ஆனால் 40 வயதுக்குக் குறைவான பார்வையிழந்த ஆண், பெண் இருபாலாரும் மதுரை குருடர் மறுவாழ்வளிப்பு நிலையத்தில் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். அவர்களது திறமையைப் பரிசோதித்த பின்னர், அங்கு அவர்களுக்குத் தொழிற்பயிற்சி அளிக்கப்படுகிறது.

திரு. பி. எஸ். மணியன் : 18 வயதுக்கு குறைவானவர்களை அந்த நிலையத்தில் சேர்ப்பதற்கு அரசு ஆவன செய்யுமா? அதோடு, இப்போது பரிசுச் சீட்டிலிருந்து வரும் வருமானத்தை பயன் படுத்தி இதுபோன்ற புனர்வாழ்வு நிலையங்கள் ஒவ்வொரு தாலுகாவிலும் ஒவ்வொரு இடத்திலும் அமைப்பதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இந்த அமெரிக்க நிறுவனம் மதுரையில் வைப்பதற்கு மட்டும்தான் தந்திருக்கிறார்கள். அதைக்கூட நிறுத்திவிடும் நிலைமை இருக்கிறது. இன்னும் சில ஆண்டுகளுக்கு அந்த உதவியைத் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறது இந்த அரசாங்கம். நெசவுத் தொழில், பிரம்பு நெய்தல், தையல் போன்றவை ஆண்கள், பெண்கள் இருசாராருக்கும் சொல்லிக் கொடுக்கப்படுகிறது. 18-ல் இருந்து 40 வயதுக்கு உட்பட்டு இருப்பவர்களைத்தான் ஓரளவு சேர்ப்பதற்கு வசதி வாய்ப்பு இருப்பதால் அதற்குக் கீழே கொண்டு வந்து அதிக இடங்களை ஒதுக்க வாய்ப்பிருக்காது. ஆகவேதான் குறிப்பிட்ட வயது என்று குறிக்கப்பட்டிருக்கிறது. நிதி வசதி பெருகியிருக்குமானால் வயதைக்கூட தளர்த்திவிடலாம். ஆனால் இப்போது இந்த நிபந்தனையின் அடிப்படையில் கொடுக்க வேண்டுமென்று அந்த நிறுவனம் சொல்லியிருப்பதால் 18-ல் இருந்து 40 வயதுக்கு உட்பட்டவர்கள்தான் எடுத்துக்கொள்ளப்படுகிறார்கள்.

திரு. அ. லெ. சுப்ரமணியம் : விழி ஒளி இழந்தவர்களுக்கு பாளையங்கோட்டையில் பல்லாண்டுகளாக ஒரு பள்ளிக்கூடம் இருந்து வருகிறது. அதில் சிலர் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வுகூட

1970 மார்ச் 13]

பெற்றிருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கெல்லாம் வேலை கிடைப்பதில்லை. ஆகவே சில தொழில் நிறுவனங்களில் 2 சதவிகிதம் அல்லது 3 சதவிகிதம் என்று அவர்களுக்குத் தகுந்தபடி ஒளி இழந்தவர்கள், காது கேட்காதவர்கள்—டிசேபிள்ட் பெர்சன்ஸ்—போன்றவர்களுக்கு வேலைகளில் ஒரு பகுதி ஒதுக்கித் தரவேண்டுமென்று தொழிலகங்களுக்கு உத்தரவிட அரசுக்கு எண்ணம் உள்ளதா ? மேலும் அப்பள்ளிகளில் பல கைப்பொருள்கள் எல்லாம் செய்கிறார்கள். அரசு அலுவலகங்களில் அவற்றை வாங்குகிறபோது இப்பள்ளிகளிலிருந்து செய்யப்படுகிற பொருள்களுக்கு முதலிடம் தரப்படுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மறுவாழ்வு அளிக்கிற திட்டத்தின் அடிப்படையில் அவர்களுக்குத் தொழிற்பயிற்சி அளிக்கப்படுகிறது. அந்த தொழிற்பயிற்சியைப் பயன்படுத்தி அவர்களின் வாழ்க்கையைச் செம்மைப்படுத்திக் கொள்ளவேண்டுமென்ற அடிப்படையில் அது அளிக்கப்படுகிறது. வேறு ஒரு இடத்திற்குப் போக வேண்டும் என்ற நிலை இல்லாமல் அவர்கள் தாங்கள் இருக்கும் இடத்திலேயே அந்தத் தொழிலை நடத்தி, வருவாய் ஈட்டிக்கொள்ள வாய்ப்பு அளிக்கப்படுகிறது. தொழில் நிறுவனங்களில் இவர்கள் பழகிய முறைக்கு ஏற்ற வகையில் வாய்ப்புகள் இருக்குமானால் எடுத்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். சிலபல தொழிலகங்களில், தொழிற்சாலைகளில்கூட குருடர்கள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். கட்டாயமாக இவ்வளவு சதவிகிதம் எடுத்துக்கொண்டுதான் தீரவேண்டும் என்று சட்டம் இயற்றுவதற்கு இல்லை. பர்சுவேஷன் என்ற முறையில் கேட்டுக்கொள்வதன் மூலம் எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கிறார்கள். தொழில் அதிபர்கள் கூட்டங்கள் கூட்டப்படுகிறபோது இது போன்று ஊனமுடையோர், குருடர்கள் போன்றவர்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டுமென்று கோரப்படுகிறது. சிலபல இடங்களில் வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. நல்ல அளவிற்கு அங்கு அவர்கள் பணியாற்றுகிறார்கள் என்ற அளவிற்குக்கூட நிலைமை இருக்கிறது. மற்றவர்கள் வெளியே போக, கான்டீன், கழிவிடங்கள் போன்ற இடங்களுக்குச் சென்று நேரத்தைப் போக்கக்கூடிய அளவிற்கு இவர்கள் போகாமல் இருந்த இடத்தில் இருந்து கொண்டு மற்றவர்களைவிட அதிகமான பணிகளை இவர்கள் புரிகிறார்கள் என்று தொழிலகங்களில் இருந்து தகவல் வருகிறது. அந்த நம்பிக்கையில் இந்த அரசு அவர்களுக்கு அதிக வேலை வாய்ப்பு தர வேண்டியதைச் செய்து வருகிறது. வருடா வருடம் தொழில் அதிபர்கள் கூட்டங்களில் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். கூடுமானவரையில் இவர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தித் தர வேலை வாய்ப்புத் துறையும் ஈடுபட்டு வருகிறது.

திருமதி கே. பி. ஜானகியம்மாள் : தலைவரவர்களே, மதுரை நகரில் பார்வையற்றோர் புனர்வாழ்வு நிலையம் 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்குத்தான் தற்போது நடந்து வருகிறது. இந்த ஆண்டு ஜனவரி முதல் கண் பார்வையற்ற சிறுவர்களுக்கென ஒரு

தனி நிலையம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அதில் குழந்தைகளுக்கு உணவு, தங்கும் வசதியான ஹாஸ்டல் கிடையாது. வெளியிலிருந்து வந்து போகிறார்கள், எனவே, அதை ஹாஸ்டல் வசதியுடன் ஏற்படுத்துவதற்கு அரசு யோசித்தால் மிகவும் உபயோகமாக இருக்கும். அதுபற்றி அரசினுடைய கொள்கையை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அதுபற்றிய விவரக்குறிப்புகள் என்னிடத்தில் இல்லை. அதுபற்றிய நிலைமைகளை ஆராயும்பொழுது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்தும் மனதில் கொள்ளப்பட்டு தக்க முறையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கரு. சீமைச்சாமி: சார், இந்தக் குருடர்கள் பயிற்சி பெற்ற பிறகு அவர்கள் செய்யும் தொழிலின் தரம் சரியாக இருக்கிறதா? தரக்குறைவாக இருக்கிறதா? அவர்களின் வேலைவாய்ப்பிற்கு அரசாங்கம் உத்தரவாதம் ஏதேனும் தருகிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, தரமாகத்தான் இருக்கின்றன. பூந்தமல்லியில் அந்தப் பணி செய்வதிலே, மிகவும் உறுதியாக, நல்லமுறையில் இருக்கிறது. அவர்கள் வேறு வகைகளில் கவனம் செலுத்தாமல், தொழிலிலேயே நூற்றுக்கு நூறு கவனம் செலுத்திச் செய்வதால் தரமாக இருக்கிறது என்பது கருத்து. ஆகவே, பல தொழிலகங்களில், அவர்களின் திறமைக்கும், அறிவுக்கும், ஆற்றலுக்கும் ஏற்றாற்போல் பணிகளைத் தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். ஆங்காங்கு வேலைக்கு அமர்த்தப்படுகிறார்கள். எலெக்ட்ரானிக்ஸ், வாட்ச் கம்பெனி போன்ற குறிப்பிட்ட இடத்திலே உட்கார்ந்து, கோர்க்க வேண்டிய பொருட்களைக் கோர்க்க குருடர்கள் பயன்பட்டு வருகிறார்கள். அவர்கள் இருந்த இடத்திலே இருந்துகொண்டு, அவர்கள் கிராமத்திலோ, ஊரிலோ இருந்து தொழிலை நடத்துவதற்கு ஏற்ற வகையில், நெசவு நெய்தல், பிரம்பு பின்னுதல், தையல் தொழில் போன்றவற்றில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

தாழ்த்தப்பட்டோர் நலனுக்காக பத்திரிகை

* 353 வினா—**புலவர் பொ. பொன்னம்பலம் :** மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தாழ்த்தப்பட்டோர் நலனுக்காக அரசுச் சார்பில் ஏதேனும் பத்திரிகை வெளியிடப்படுகின்றதா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இல்லை.

புலவர் பொ. பொன்னம்பலம் : மதிப்பிற்குரிய பேரவைத் தலைவரவர்களே, தாழ்த்தப்பட்டோர் நலன், பிந்தங்கியோர் நலனுக்காக அரசுச் சார்பில் பத்திரிகை இனிமேல் வெளியிடுவதற்கு அரசு ஆராயுமா என்று அறிய விழைகிறேன்.